# நூல் தொடரின் முன்னுரை "பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்"

ஒரு பிள்ளையை அடையாளப்படுத்தவும், அப்பிள்ளையின் மொழித்திறனை வளர்க்கவும் ஜெர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் "Herkunfts- sprachlicher Unterricht (HSU)" எனவும் சுவிற்சர்லாந்தில் "Unterricht in Heimatlicher sprache und Kultur (HSK)" எனவும் வழங்கும் பாரம்பரியமொழிக் கற்பித்தல் (பா.மொ.க HLT) அல்லது தாய்மொழி கற்பித்தல் துணைசெய்கிறது. இது பன்மொழித்துவத்தை ஊக்குவிப்பதுடன் மதிப்புள்ள தன்னிலை மற்றும் சமூகநிலை வளமாகவும் பணி செய்கிறது. இவ்வுண்மை பற்றிய விழிப்புணர்வு ஆய்வு மற்றும் கட்டமைப்பு வழிகாட்டல்களான ஐரோப்பியப் பேரவையின் R(82)18 மற்றும் R(98)6 பரிந்துரைகளினால் உருவானது. எனினும், இத்தகைய கற்பித்தல் வழமையான பாடத்திட்ட வகுப்பறைக் கற்பித்தலைவிட பெரும்பாலும் மிக இடர்ப்பாட்டு நிலைகளிலேயே நடைபெறுகிறது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாயுள்ளன:

- பல இடங்களில் பாரம்பரியமொழிக் கல்வி நிறுவன நிலையிலும் நிதி நிலையிலும் காப்பற்ற வலுவிலேயே உள்ளது. எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்தில், பாரம்பரியமொழி ஆசிரியர்களுக்கு அவர்கள் தாய் நாட்டினால் அல்லது பெற்றோர்களினாலேயே நிதி வழங்கப்படுகிறது.
- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் மிகக் குறைவான முறையிலேயே தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. வழமையான பாடத்திட்ட ஆசிரிய அணியுடனான தொடர்பும் கூட்டுறவும் பெரும்பாலும் மிகக் குறைந்த முறையிலேயே மேம்படுத்தப் பட்டுள்ளன.
- பாரம்பரியமொழி வகுப்புகள் கிழமையில் இரண்டு மணி நேரம் மட்டும் அமைவதால், ஆக்கநிலையான, இடையீடற்ற கற்றல் கடினம் ஆகின்றது.
- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் விருப்பக்கல்வியாக அமைந்தமையால், மாணவர்களின் பங்களிப்புச் சிறிதாகக் காணப்படுகிறது.
- பாரம்பரியமொழி வகுப்புகள் பல்வகுப்புக்களை இணைத்து கற்பிக்கும் முறையை கொண்டுள்ளமையால், 1-9ம் வகுப்பு வரையுள்ள மாணவர் ஒரு வகுப்பிலே சேருகின்றனர். இது பெரும் உள்வாரி வேறுபாட்டினைக் கையாள்வதையும் கற்பித்தல் திறனையும் ஆசிரியரிடமிருந்து வேண்டிநிற்கின்றது.
- பாரம்பரியமொழி வகுப்பறைகளில் பலவகைப்பட்ட மாணவர் குழுமம் இருப்பது போல மாணவர்களின் மொழித் தகைமையும் வேறுபட்டதாயுள்ளது. சிலர் வீட்டில் தம் தாய்மொழியின் எழுத்துமொழிவழக்கிலும் பேச்சுமொழி வழக்கிலும் நல்ல செயற்றிறன் பெற்றிருக்கும் அதே வேளை, மற்றவர்கள் பேச்சுமொழியில் மட்டுமே பேசுபவராயுள்ளனர். புதிய நாட்டில் ஏற்கனவே பல ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பாரம்பரியமொழி பேசுபவர்களாகிய இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர்க்கு, அங்கு பேசப்படும் மொழி (எ.கா. ஜெர்மன்) மேலாதிக்க மொழியாக அமைய அவர்கள் முதல் மொழியாற்றல் பேச்சுமொழியாக வரையறுக்கப்படுவதுடன், அதுவும் குடும்பச் சிக்கல்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவையுடன், வாய்வழியாக மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது.
- பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம் தாய் நாடுகளில் பொதுவாக நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றிருப்பார்கள். ஆனால் குடிபெயர்ந்த நாடுகளில் பல்வகுப்புச் சூழ்நிலையில் கற்பித்தலின் உண்மை நிலைகளுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அவர்கள் முன்னேற்பாடாயில்லை. தொடர்கல்வி விருத்தி வாய்ப்புகள் வாழும் நாடுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

"பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" தொடர் தாய்மொழிக் கல்வி வகுப்பு ஆசிரியர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத வேண்டப்படுகிற பணிக்குத் துணை செய்கிறது. இதனூடாக இத்தகைய உகந்த தரமுள்ள கற்றலுக்கு பங்களிக்க எண்ணுகிறது. மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய குடிபெயர் நாடுகளின் (அடிப்படைகளும்... என்னும் தொகுதியை ஒப்பிடுக) தற்போதைய ஆசிரியப்பணி மற்றும் கற்பித்தல் பற்றிய பின்னணிகள் மற்றும் கோட்பாடுகளின் மீளாய்வு, வகுப்பறைக்கான உருப்படியான நடைமுறை மதியுரைகளையும் மாதிரிகளையும் கொண்ட பணிநூல்கள் "கற்பித்தல் மதியுரைகள்" நூலின் துணையுடன் இந்நோக்கினை மேலும் முன்னெடுக்கின்றன. மொழியியல் தகைமையை முன்னெடுப்பதையே இவை வலியுறுத்துகின்றன. கற்பித்தல் மதியுரைகள் வேண்டுமென்றே, வழமையான பாடத்திட்டம் அதன் கற்பித்தல் கருவிகள் ஊடாக வந்த மாணவர்கள் நன்கு அறிந்த கற்பித்தற்கலைக் கோட்பாடுகள் நடைமுறைகளை நோக்கிச் செல்கின்றன. இத்தகைய நன்கறிகை, பாரம்பரியமொழிக் கல்விக்கும் வழமையான பாடத்திட்டக் கற்பித்தலுக்குமிடையே ஒரு நெருக்கத்தினை கொண்டு-வந்து அவை இரண்டுக்குமிடையே முடிந்தளவு பெரியதோர் இணைப்பினை உறுதிப்படுத்துகின்றது.
பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டங்களின் ஆசிரியர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களை வழமையான பாடத்திட்டத்தில் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள கற்பித்தல் அணுகுமுறைகளுடனும் குறிப்பிட்ட நடைமுறைகளுடனும் நன்கு இணைத்துக்கொள்ள, அவர்கள் மேலும் பயற்சியினைப் பெறுகின்றனர். இது இருமொழி, இருபண்பாட்டு அடிப்படையில் வளர்ந்துவரும் மாணவர்களின் கல்விச் செயன்முறையில் இணையான மதிப்புள்ள பங்காளிகளாக தம்மை உயர்த்துவதைப் வலுப்படுத்தும் என நம்பப்படுகின்றது.